# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண். 34/ந/2025

நாள் 01.07.2025

திரு.J.சமியுல்லா ஷெரிப்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி. – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, மேஸ்திரி லத்தீப் வீதி, கதவு எண்.10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.J.சமியுல்லா ஷெரிப் என்பவரின் 09.12.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2024 அன்று பெறப்பட்டு, 34/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, மேஸ்திரி லத்தீப் வீதி, கதவு எண்.10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.J.சமியுல்லா ஷெரிப் என்பவரின் 09.12.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" Kindly refer my earlier petition dt. 11.12.2023 reporting illegal encroachment and illegal construction in common walkway at Municipal street.

The petition was disposed off on19.09.2024 stating the reason that the matter is pending in court of law and cannot be dealt with under sec.10(3) b.

In the same location another major encroachment done by Shri Sekar which is motivated to him by previous encroachment because which is not dealt properly by municipal authorities not enforcing the power given to them in municipal act.

The same was brought to notice of Municipal Authorities with encroachment sketch issued by the town surveyor.

Spite of my notice the municipal authorities now also not taken any action which leads to brought the kind attention of Local Body Ombudsman for remedies for

this fresh encroachment. I bring the kind attention of Ombudsman that there no any case is pending for this subsequent encroachment.

I request to issue suitable instruction to the concern municipal authorities to clear this subsequent fresh encroachment and also recommendation of departmental action on concern municipal authorities as per provision given in the The Tamil Nadu Local Bodies Ombudsman act under various clauses" என தெரிவித்துள்ளார்.

**2.** மனுதாரரின் புகார் மனு மீதானு அறிக்கையினை அனுப்புமாறு **17.02.2025** நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பின் மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

**3.** ஆற்காடு நகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க.எண்.586.2022/எப்1, நாள் **28.02.2025**–ல் கீழ்க்கண்ட விவரத்தினை தெரிவித்துள்ளார்.

" ஆற்காடு நகராட்சி சர்வே வார்டு சி, பிளாக் 19, நகரளவு எண்.18, மேஸ்திரி லத்திப் தெரு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான தெருவில் 2.0 மீ X 6.2 மீ = 12.4 ச.மீ. திண்ணைகள், AC ஷீட் மற்றும் படிகள் ஆகியவை அமைத்து ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டது.

எனவே தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் 182(1) (2) 313, 338–ன் கீழ் 22.07.2021 அன்று மேற்படி ஆக்கிரமணத்தை உடனடியாக அகற்ற கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் திரு.சமியுல்லா ஷெரிப், ஆற்காடு என்பவர் மேற்படி இடத்தில் ஆக்கிரமணம் செய்துள்ள திரு.லோகநாதன் (எ) உலகநாதன் மற்றும் நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்து இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் O.S.No.50/2022 வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கானது தற்போது நிலுவையில் உள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**4)** இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையாளர் ஆகியோரை **16.04.2025** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் **08.04.2025** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5)**மனுதாரர் திரு.J.சமியுல்லா ஷெரிப் என்பவர் **16.04.2025** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"எனது வீட்டிற்கு பின்புறம், (back side exit point) 14 அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக நான் கடந்த 2020ம் ஆண்டு முதல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் மனு செய்து மற்றும் ஆற்காடு நகராட்சி மீது சட்டரீதியாக நோட்டீஸ் வழங்கியுள்ளேன். ஆனால் என்னுடைய மேற்படி நடவடிக்கைகளுக்கு எந்தவித நடவடிக்கையும் ஆற்காடு நகராட்சியினரால் எடுக்கப்படவில்லை.

முதலாவதாக வலது பக்கத்தில் திரு.உலகநாதன் என்பரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது குறித்து 2023ம் ஆண்டு, ஆக்கிரமிப்பு தொடர்பான சட்டரீதியான நடவடிக்கையை O.S.No.50/2022 என்ற வழக்கின் மூலம் தொடர்ந்தேன். தற்போது திரு.சேகர் என்பவர் இடது பக்கத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேலும் 11.12.2023 நாளிட்ட எனது புகார் மனுவினை

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்து நிவாரணம் கோரியிருந்தேன். ஆனால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், நீதிமன்றமொன்றில் வழக்கு நிலுவையில் இருப்பதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 10(3) (b)–ன்படி எனது புகார் மனுவினை தள்ளுபடி செய்து விட்டது.

தற்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் இன்றைய நேரடி விசாரணையில் ஆற்காடு நகராட்சி சார்பாக ஆஜரான நகரமைப்பு ஆய்வாளர் தான் பதவியேற்றவுடன், ஆக்கிரமணதாரர்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சிகளின் சட்டம், 1998 (திருத்தப்பட்டது 2022) பிரிவு 128–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு, 13.03.2025, 14.03.2025 மற்றும் 17.03.2025 ஆகிய தேதிகளில் வலது மற்றும் இடது பக்க ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டது என தெரிவித்துள்ளார். இருப்பினும் மேற்படி ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் உள்ளது.

எனவே மேற்படி இடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டு விட்டதா என்பது குறித்து எனக்கு விளக்கமளிக்க ஆற்காடு நகராட்சி ஆணையருக்கு உரிய உத்தரவு வழங்கிட இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

6)எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் சார்பாக ஆற்காடு நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் 16.04.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்புகள் கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்காணும் ஆக்கிரமிப்புகள் அகற்ற தெரிவித்துள்ள இடமானது ஆற்காடு நகர சர்வே வார்டு C பிளாக் 19, நகரளவு எண்.18–ல் திரு.லோகநாதன் (எ) உலகநாதன் என்பவர் சுமார் 12.40 ச.மீ. இடம் ஆக்கிரமிப்பு செய்து ACC சீட், மாடிப்படிக்கட்டு அமைத்திருந்ததை அகற்றப்பட்டது.

மேலும், திரு.சேகர் என்பவரது கட்டிடத்தின் மாடிப்படிக்கட்டுக்கள் மற்றும் திண்ணை ஆகியவைகள் தற்போது அனுபவதாரர் திருமதி.அமுலு க/பெ.திரு.கோபி பெயரில் உள்ள ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டது. மேற்கண்ட திரு.லோகநாதன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்திருந்ததின் மீது மனுதாரர் திரு.சமியுல்லா ஷெரிப், ஆற்காடு என்பவர், மாண்பமை இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் திரு.லோகநாதன்,ஆற்காடு என்பவரை முதல் பிரதிவாதியாகவும், ஆற்காடு நகராட்சி ஆணையரை இரண்டாம் பிரதிவாதியாகவும், நகராட்சி பொறியாளரை மூன்றாம் பிரதிவாதியாகவும் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரை நான்காம் பிரதிவாதியாகவும் இணைத்து வழக்கு எண்.O.S.எண்.50/2022–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. மேலும் வழக்கில் எந்த ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளையும் (Permanent Injunction) இல்லை. ஆகவே, தமிழ்நாடு உள்ளாட்சிகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்டது 2022) பிரிவு 128–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு 13.03.2025, 14.03.2025 மற்றும் 17.03.2025 ஆகிய தேதிகளில் மேற்காணும் ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டுவிட்டது என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே ஆற்காடு நகராட்சியின் நடவடிக்கையினை ஏற்று இவ்வழக்கினை இத்துடன் முடித்து வைக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7)மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், ஆற்காடு நகராட்சி ஆணையாளரின்அறிக்கை, ஆற்காடு நகராட்சி ஆணையாளரின் சார்பில் ஆஜரான நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் மிக கவனமுடன் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனது 11.12.2023 நாளிட்ட மனுவில் நகராட்சி வீதியில் உள்ள பொது நடைபாதையில் ஆக்கிரமிப்பு மற்றும் விதிமீறிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என தெரிவித்து அதை இம்முறைமன்ற நடுவ 19.09.2024 நாளிட்ட ஆணையில், " the matter is pending in court of law and cannot be dealt with under sec.10(3) (b) என முடித்து வைக்கப்பட்டதாக தெரிவித்து, அதே நகராட்சி வீதி பொதுப்பாதையில் திரு.சேகர் என்பவர் ஆக்கரமிப்புக்களை ஏற்படுத்தியுள்ளார் எனவும், தன்னுடைய தற்போது புகார் மனுவில் கூறப்பட்டுள்ள இடம் தொடர்பாக வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து தனக்கு நிவாரணம் வழங்கும்படி இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமணதாரர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவுகள் 182(1) (2), 313, 338–ன் கீழ் 22.07.2021 அன்று மேற்படி ஆக்கிரமணத்தை உடனடியாக அகற்ற தெரிவித்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதும், இந்நிலையில் மனுதாரர் மேற்படி இடத்தில் ஆக்கிரமணம் செய்துள்ள திரு.லோகநாதன் (எ) உலகநாதன் மற்றும் நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்து இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் O.S. No.50/2022 வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு நிலுவையில் உள்ளதும், மேலும் மேற்காணும் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமணதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம், 1998 (திருத்தப்பட்டது 2022) பிரிவு 128–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு, 13.03.2025, 14.03.2025 மற்றும் 17.03.2025 ஆகிய தேதிகளில் ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டது என்ற விவரம் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 128–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு 13.03.2025, 14.03.2025 மற்றும் 17.03.2025 ஆகிய தேதிகளில் வலது மற்றும் இடது பக்க ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டது என தெரிவித்திருந்தாலும் மேற்படி ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் உள்ளது என தெரிவித்திருப்பது அறியமுடிகிறது.

மேலும் மனுதாரர் தனது 18.06.2025 நாளிட்ட மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"Please refer my petition dt.19/12/2024. During enquiry held on 16/04/2025 on my petition, the official present from Arcot Municipality made statement that all the encroachment were cleared, however self during my submission of statement pointed out concern on their statement.

Sir, I bring your kind attention to you that again same encroacher are rebuilding the structure which demolished before on public encroachment area, same was brought to notice of concern municipal authorities on 04/06/2025 but no action taken for the same.

Sir, I request you to make note of the inefficiency and attitude of the Arcot Municipal officials even the issue was brought to the notice of Ombudsman level" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ள இடத்தில் ஆக்கிரமிப்புதாரர் மறுபடியும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இந்நேர்வில், மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினை கள ஆய்வு செய்யவும், மனுதாரர் தெரிவித்துள்ளதுபோல, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடம் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால், ஆக்கிரமிப்பினை சட்ட விதிகளை பின்பற்றி அகற்றி, குற்ற நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையரை அறிவுறுத்துமாறு வேலூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு பரிந்துரை செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2025**ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் **01**–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.J.சமியுல்லா ஷெரிப்
எண்.10, மேஸ்திரி லத்தீப் வீதி,
ஆற்காடு – 632 503.
இராணிப்பேட்டை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

4/7/25

செயலாளர்